

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | பிப்ரவரி 07, 2019 | புரட்சி 18 | முழக்கம் 04 | விலை: ரூ.3.00


## அரசே சமர்ப்பித்த அறிக்கை தரும் அதிர்ச்சித் தகவல்கள்

# மத்திய அரசுத் துறைகளில் பல இலட்சம் வேலைகள் நிரப்பப்படவே இல்லை

*மோடி ஆட்சி பல இலட்சம் காலியாக உள்ள பதவிகளை நிரப்பவே இல்லை. அரசு தந்த புள்ளி விவரங்களே இதை ஒப்புக் கொள்கின்றன.*

பொதுப் போட்டியில் முன்னேறிய ஜாதியினருக்கு மட்டும் பொருளாதார அடிப்படையில் 10 சதவீத இடஒதுக்கீட்டை நடுவண் ஆட்சி அறிவித்திருக்கிறது. பார்ப்பனர்கள் உயர்ஜாதியினரைத் திருப்திப்படுத்தி அவர்களின் வாக்குகளைப் பெறும் நோக்கத்தோடு அவசர அவசரமாக இந்த சட்டத் திருத்தம் வந்துள்ளது. ஆனால் மத்திய பல்கலைக் கழகங்கள், தொடர்வண்டித் துறை, காவல்துறை, அஞ்சலகத் துறை, பள்ளிக் கல்வி மற்றும் நீதித் துறைகளில் நீண்டகாலமாக ஏராளமான பணியிடங்கள் நிரப்பப்படாமலே இருக்கின்றன. இது குறித்து புள்ளி விவரங்களை 'பிசினஸ் லைன்' ஜன.10ஆம் தேதி ஆங்கில நாளேடு முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. மேலே குறிப்பிட்டத் துறைகளில் 28 இலட்சம் பணி இடங்கள் காலியிடமாகவே நிரப்பப்படாமல் இருக்கின்றன என்ற அதிர்ச்சி தகவலை அந்த ஏடு தந்துள்ளது.

மருத்துவ சேவை குறைந்த செலவில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அகில இந்திய மருத்துவக் கழகத்தில் (All India Institute of Medical Science), உயர் கல்வி நிறுவனங்களில் 4089 புதிய பதவிகள் உருவாக்க அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால், போபால், புவனே சுவர், ஜோக்பூர், பாட்னா, ரெய்ப்பூர் மற்றும் ரிஷிகேஷ் 'எய்ம்ஸ்' மருத்துவக் கழகங்களில் 20,221 பேராசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கான பணி இடங்கள் காலியாக இருப்பதாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த சுகாதார நலத் துறை அறிக்கை கூறுகிறது.

மத்திய மனித வளத் துறை அமைச்சகத்தின் கீழ் 41 மத்திய பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன. இவற்றில் விரிவுரையாளர்கள் உள்பட 17,092 பதவிகளை நிரப்ப அரசு ஒப்புதல் வழங்கியது. ஆனால் நிரப்பப்பட்ட இடங்கள் 5606 மட்டும்தான். 2018 ஏப்ரலில் மனித வளத் துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை இத் தகவல்களைக் கூறுகிறது.

அதே மனித வளத் துறை அமைச்சகத்தின் அறிக்கையில் மத்திய அரசு நடத்தும் தொடக்கப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் 10 இலட்சம் ஆசிரியர் பணி இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளதாகக் குறிப்பிடுகிறது. 'சர்வ சிக்ஷ அபியான்' என்ற மத்திய அரசு நடத்தும் பள்ளிகளில் 4,17,057 ஆசிரியர் பணி இடங்களை நிரப்ப அனுமதி கொடுத்திருந்தும் இன்னும் நிரப்பப்படவில்லை.

இந்தியா முழுதும் பல்வேறு மாநிலங்களில் உள்ள உயர்நீதிமன்றங்களில் 388 நீதிபதிகள் பதவிகளும், கீழமை நீதிமன்றங்களில் 5135 மாஜிஸ்திரேட் பதவிகளும் நிரப்பப்படாமல் இருப்பதாக மத்திய சட்ட அமைச்சகம் அண்மையில் தாக்கல் செய்த அறிக்கை கூறுகிறது.

மத்திய ரிசர்வ் போலீஸ் படையில் 22,746 பணி இடங்களும் எல்லை பாதுகாப்புப் படையில் 19,320 பணி இடங்களும், மத்திய தொழில் பாதுகாப்புப் படைப் பிரிவில் 5,165 இடங்களும், சீமா பால் என்ற படைப் பிரிவில் 19,175 இடங்களும், இந்தோ-திபேத்தியர்கள் எல்லைப் பாதுகாப்புப் படைப் பிரிவில் 6,398 இடங்களும், 'அசாம் ரைஃபில்' என்ற பாதுகாப்புப் படைப் பிரிவில் 3774 இடங்களும் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்ற தகவலை உள்துறை அமைச்சகத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை கூறுகிறது.

இரயில்வே துறையில் பாதுகாப்பு தொடர்பான பிரிவில் 1,51,348 பதவிகள் காலியாக உள்ளன. ஏப்.2018 நிலவரப்படி, இரயில்வேயில் கெசட்டட் நிலை பெறாத 2,50,410 பதவிகள் நிரப்பப்படவில்லை.

கடந்த டிசம்பர் மாதம் மத்திய வேலை வாய்ப்புத் துறை சார்பில் மாநிலங்களவையில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மார்ச் 1, 2016 வரை மத்திய அரசு நிர்வாகப் பதவிகளில் நிரப்பப்படாமல் இருக்கும் காலி இடங்கள் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ள. குரூப் 'ஏ' பிரிவில் 15,284 இடங்களும், 'பி' பிரிவில் (கெசட்டட் நிலை பதவிகள்) 26,310 இடங்களும் கெசட்டட் நிலை இல்லாத பதவிகள் 49,740 இடங்களிலும் குரூப் 'சி' பிரிவில் கெசட்டட் நிலை இல்லாத பிரிவுகளில் 3,21,418 பதவிகளும் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

அனைத்து மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களில் காவல் துறைகளில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள பதவிகள் 4,43,524. காவல்துறை ஆய்வு மற்றும் மேம்பாட்டுக் கழகம் தந்துள்ள தகவல் இவை. மத்திய பண்பாட்டுத் துறை அமைச்சக அறிக்கை 4000 இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதை சுட்டிக் காட்டுகிறது. ஏராளமான அஞ்சலகங்களில் 57,574 பதவிகள் காலியாக உள்ளன.

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என்ற உறுதிமொழியோடு மோடி பதவிக்கு வந்தார். வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக பிரதமர் வேலை உருவாக்கத் திட்டம், தீனதயாள் உபாத்யாயா கிராமின் கவுசல்யா யோஜனா, தீனதயாள் அந்தோதயா - தேசிய நகர்ப்புற வாழ்வாதார மய்யம் என்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன. கடந்த நான்கரை ஆண்டுகளில் இந்த அமைப்புகள் உருவாக்கிய வேலை வாய்ப்புகள் 27 இலட்சம் மட்டுமே. மோடியின் உறுதிமொழிப்படி சுமார் 8 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கியிருக்க வேண்டும். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்காதது மட்டுமல்ல, ஏற்கனவே காலியாக உள்ள 28 இலட்சம் வேலை வாய்ப்புக்கான இடங்களையும் நிரப்பாமல் கிடப்பில் போட்டுள்ளது, மோடி ஆட்சி!

இந்த நிலையில் உயர்ஜாதியில் ஏழைகளுக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கு அவசர அவசரமாக கொண்டு வந்துள்ள சட்டத்திருத்தம் கண் துடைப்பு நடவடிக்கை என்பதோடு இட ஒதுக்கீட்டின் அடிப்படையையே தகர்க்கும் ஆபத்தான திட்டமாகும்.

## சிக்கல்களை அதிகரிக்கப்போகும் பொருளாதார இடஒதுக்கீடு

கல்வி, வேலைவாய்ப்பு பெறுவதில் பல்வேறு சாதிகள், சமூக-பொருளாதார அந்தஸ்துள்ள சமூகங்களுக்கு இடையில் மிகப் பெரிய வேறுபாடுகள் நிலவும்போது, இடஒதுக்கீடு என்பது அர்த்தமுள்ள நடவடிக்கைதான். அதேசமயம், நாடு குடியரசான புதிதில் அறிமுகப்படுத்தப்பட்ட இடஒதுக்கீட்டை, இன்றைய நவீன யுகத்தில் மறுபரிசீலனை செய்வது அவசியம். பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய்வோம்.

**எல்லோருக்கும் இடஒதுக்கீடு?**

பொருளாதாரரீதியாகப் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு 10% ஒதுக்கீட்டை அரசியல் சட்ட (124ஆவது திருத்த) மசோதா-2019 உறுதியளிக்கிறது. நாடாளுமன்ற விவாதத்தில் பல்வேறு அடிப்படைக் கூறுகள் விவாதிக்கப்பட்டாலும் இந்த மசோதா இது பற்றி மவுனம் சாதிக்கிறது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தொடர்பாக 'உயர் வருவாய்ப் பிரிவினர்' (கிரீமி லேயர்) என்று அடையாளம் காண அடிப்படையாகக் கருதப்படும் 'ஆண்டுக்கு 8 இலட்ச ரூபாய்' என்ற அடிப்படையே இதற்கும் கொள்ளப்பட்டிருக்கிறது. இது எந்த அளவுக்குப் பயன் தரும் என்று தெரியவில்லை. இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் 'உயர் வருவாய்ப் பிரிவினர்' என்று நிர்ணயிக்கப்பட்டதற்குக் காரணம், வசதியானவர்களை ஒதுக்குவதற்காக. தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு (என்எஸ்எஸ்) 2011-12 தரவுகளின்படி குடும்பங்களின் ஆண்டு நபர்வாரிச் செலவு 99% அளவுக்கு இந்தத் தொகைக்கும் குறைவாகத்தான் இருக்கிறது. இந்திய மனிதவள வளர்ச்சி சர்வே (ஐஎச்டிஎஸ்) கணக்கெடுப்பின்படி 98% குடும்பங்களின் வருடாந்திர வருமானம் ரூ.8 லட்சத்துக்கும் குறைவு. மசோதாவில் கூறியுள்ள சொந்த வீட்டின் பரப்பளவு, சொந்த நில அளவு ஆகியவற்றையும் சேர்த்துப் பரிசீலித்தால்கூட 95%-க்கும் அதிகமான மொத்த குடும்பங்கள் இந்த வருமான வரம்புக்குள்தான் இருக்கின்றன. அப்படியென்றால் நாம் யாரை ஒதுக்குகிறோம்? யாரையும் அல்ல. எல்லோருக்கும் இடஒதுக்கீடு என்பது சாத்தியமாகுமா?

பொருளாதாரரீதியான இடஒதுக்கீட்டால் கிடைக்கும் பலன்கள் மிகக் குறைந்தபட்சமாகவும், அதற்கான விலை அரசு எதிர்பார்ப்பதைவிட அதிகமாகவும் இருக்கும். முதல் அம்சம், இடஒதுக்கீடுகளுக்கான இடங்கள் போக எஞ்சிய இடங்கள் அனைத்துப் பிரிவினரும் போட்டியிடுவதற்கானது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலினத்தவர், பழங்குடிகள் ஆகியோருக்கும் பொதுப் பிரிவினருக்குமானது அந்த இடம். அதிலிருந்து 10% குறைக்கப்பட்டால், இப்போது இடஒதுக்கீடு பெறும் சமூகத்தவருக்கு மேலும் 10% குறைக்கப்படுகிறது. இது இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தும். காரணம் மக்கள்தொகையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குறைந்தபட்சம் 52% அல்லது அதற்கும் மேல். இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு 27% தான் என்பது இங்கு கவனிக்க வேண்டிய விஷயம்.

**சாதிச் சான்றிதழ்கள்**

பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீடு என்பது நடைமுறையில் மிகவும் சவாலானது. பட்டியலினத்தவர்கள், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சாதிச் சான்றிதழ் பெறுவது ஏற்கெனவே சிரமமான வேலையாக இருக்கிறது. ஆனால் பொருளாதார அடிப்படையில் தன்னைப் பின்தங்கியவராக ஒருவர் எளிதாக சான்றிதழ் பெற்று விடலாம்; பொருளாதாரம் மாறக் கூடியது; ஜாதி மாறாதது.

# பார்ப்பன உயர்ஜாதிப் பிடியில் சிக்கியுள்ள அய்.சி.அய்.சி.அய். வங்கியின் மெகா ஊழல்

அய்.சி.அய்.சி.அய். வங்கி தலைமை பெண் அதிகாரி, சந்தா கோச்சார் 'சிந்தி' குடும்பத்தில் பிறந்தவர். பார்ப்பனருக்கு இணையான முன்னேறிய ஜாதி. அவர் நாள் ஒன்றுக்கு வாங்கிய சம்பளம் ரூ. 2.18 இலட்சம். பார்ப்பன உயர்ஜாதிக் கும்பலிடம் சிக்கியுள்ள அதிகாரத்தை எவ்வளவு முறைகேடாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு இவரது ஊழல் ஒரு உதாரணம். இவரைக் காப்பாற்ற அய்.சி.அய்.சி.அய். வங்கி பார்ப்பன நிர்வாகமே துணை போனதும் இப்போது அம்பலமாகியிருக்கிறது. இதன் பின்னணி என்ன?

அய்.சி.அய்.சி.அய். வங்கி, நாட்டின் மிகப்பெரிய தனியார் வங்கி. இந்த வங்கிக்கு இன்னொரு முகம் தலைமைச் செயல் அதிகாரியாக இருந்த சந்தா கோச்சார். ஆனால், இன்று இரண்டுமே தங்களது நம்பகத்தன்மையை முற்றிலுமாக இழக்கும் நிலை உருவாகியுள்ளது.

2012ஆம் ஆண்டில் ஐசிஐசிஐ வங்கி வீடியோகான் நிறுவனத்துக்கு கடன் வழங்கியதில் தீபக் கோச்சார் ஆதாயமடைந்தார் என்று வீடியோகான் மற்றும் ஐசிஐசிஐ பங்குகளை வைத்திருக்கும் முதலீட்டாளரான அர்விந்த் குப்தா குற்றம் சாட்டினார். ஆனால் அப்போது யாரும் கண்டு கொள்ளவில்லை. 2017இல் வீடியோகான் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட கடன் வாராக் கடனான பிறகுதான் ஊடகத்தின் மூலம் வெளிச்சத்துக்கு வந்தது.



ஆரம்பத்திலிருந்தே இந்தக் குற்றச்சாட்டை வங்கியின் தலைவர் மகேந்திரகுமார் சர்மா மறுத்தார். சந்தா கோச்சார் மீது முழு நம்பிக்கை உள்ளது. அவர் தூய்மையானவர். வங்கி அவரை 100 சதவீதம் நம்புகிறது என்று சான்றிதழ் வழங்கினார். ஒரு கட்டத்தில் நிலைமை தீவிரமானதைத் தொடர்ந்து, ஓய்வுபெற்ற நீதிபதி பி.என். ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் விசாரணை குழுவை வங்கி நிர்வாகம் அமைத்தது. அப்போது, சந்தா கோச்சார் விடுமுறையில் அனுப்பப்பட்டார். விசாரணைக்குழுவின் அறிக்கை குறித்து எந்த அறிகுறியும் தெரியாமல் இருந்தது. இந்த நிலையில், சந்தா கோச்சார், தனது விடுமுறைக் காலம் முடிந்த பிறகு பணியில் சேராமல், அக்டோபர் மாதத்தில் பதவியை ராஜினாமா செய்தார். வங்கியும் இவரது ராஜினாமாவை ஏற்று, அவருக்குப் பதிலாக சந்தீப் பாக்ஷியை அப் பொறுப்பில் அமர்த்தியது.

கடந்த வாரம் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தார். அதில் வங்கி விதிகளை மீறி சந்தா கோச்சார் நடந்து கொண்டது உறுதியானது. வீடியோகான் நிறுவனத்துடன் சேர்த்து மொத்தம் 6 நிறுவனங்களுக்கு விதிகளை மீறி கடன் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தணிக்கை முடிவுகளிலும் சந்தா கோச்சார், அவரது கணவர் தீபக் கோச்சாருக்கு வீடியோகான்

4ஆம் பக்கம்

# எல்.அய்.சி. ஊழியர் ஆர்ப்பாட்டம்

## பார்ப்பன அதிகார மய்யங்களை தகர்க்காமல் சமூகநீதி பெற முடியாது: விடுதலை இராசேந்திரன் பேச்சு

பிற்படுத்தப்பட்டோருக்கான இந்திய அரசின் அரசாணைகளை நடைமுறைப்படுத்தாத எல்.அய்.சி. நிர்வாகத்தையும் அதன் தென் மண்டல மேலாளரையும் கண்டித்து தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் 5.1.2019 காலை 10 மணியளவில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நடந்தது. தென்மண்டல எல்.அய்.சி. கூட்டமைப்புத் தலைவர் ஆ.லோகநாதன் தலைமை தாங்கினார். சங்க பொறுப்பாளர்கள் இ. அன்புச் செல்வம், கு. கமலக்கண்ணன், பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் நலச் சங்கங்களின் தேசிய அமைப்பு பொதுச் செயலாளர் கு. தனசேகர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பீட்டர் அல்போன்ஸ், மு. வீரபாண்டியன் (சி.பி.அய்.), எஸ்.கே. கார்வேந்தன் (முன்னாள் எம்.பி.), திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆகியோர் உரையாற்றினர். கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"அய்ந்து முக்கியக் கோரிக்கைகளை நீங்கள் முன் வைத்திருக்கிறீர்கள். அவை அனைத்தும் புதிய கோரிக்கைகள் அல்ல. அரசாணைகளாக வெளி வந்த பிறகும் நிர்வாகம் நிறைவேற்ற மறுக்கும் கோரிக்கைகள், ஊழியர் நலச் சங்கத்துக்கு அங்கீகாரம் தரப்படவில்லை; அதிகாரபூர்வமாக சங்கத்தின் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்படவில்லை; காலி இடங்கள் நிரப்பப்படவில்லை; ஊழியர்களின் தேர்வுக்கான நேர்முகத் தேர்வுக் குழுவில் பிற்படுத்தப்பட்டோருக்கு பிரதிநிதித்துவம் இல்லை. அலுவலகத்துக்கு இடம் வழங்கப்பட வில்லை என்ற இந்த கோரிக்கைகள் மிக சாதாரணமாக நிறைவேற்றப்படக் கூடியவைகளாக இருந்தும் 1997ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப் படாமல் இழுத்தடிக்கப்படுகிறது என்றால், எவ்வளவு பெரிய அவமானம்? பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கையில் பெரும்பான்மை என்றாலும் அதிகாரம் பார்ப்பன-பனியாக்களிடம் தான் இருக்கிறது. இதுதான் இதில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம். முடிவெடுக்கக்கூடிய அதிகாரத்தில் அவர்கள்தான் இருக்கிறார்கள்.

113 எல்.அய்.சி. மண்டலங்களில் காலியாக உள்ள மொத்த பதவிகளே 197 தான் என்று எல்.அய்.சி. நிர்வாகமே முடிவு செய்து அந்தப் பதவிகளுக்கு மட்டும் மத்திய அரசின் வேலைவாய்ப்புத் துறையில் ஒப்புதலைப் பெற்று விட்டது. ஆனால் இரண்டு மண்டலங்களில் மட்டுமே 168 பதவிகள் நிரப்பப்பட வேண்டியிருக்கின்றன. இதைச் சுட்டிக்காட்டினால் "நாங்கள் 197 பதவிகளை நிரப்ப ஒப்புதல் பெற்று விட்டோம்; முடிந்தால், நீங்கள் மத்திய அரசு வேலை வாய்ப்புத் துறை அமைச்சகத்திடம் போய் அனுமதி பெறுங்கள்" என்று கூறுகிறார்கள் என்றால், எவ்வளவு அதிகாரத் திமிர் இதில் அடங்கியிருக் கிறது?

பணிக்கான நேர்முகத் தேர்வுக் குழுவில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவருக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்பது பெரிய பொருளாதாரம் தொடர்புடைய கோரிக்கையும் அல்ல; அதைக்கூட ஏற்க மறுக்கிறார்கள் என்றால் என்ன நியாயம்? அதிகாரம் யாரிடம் குவிந்து கிடக்கிறது?

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்கள் அதிர்ச்சியூட்டுகின்றன. 2017ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி நிலவரப்படி நான்கு ஆயுள் காப்பீட்டுக் கழகங்களில் அதாவது நேஷனல் இன்சூரன்ஸ், நியு இந்தியா அசூரன்ஸ், ஓரியண்டல் இன்சூரன்ஸ் ஆகிய நிறுவனங்களில் 43 மேலாளர்களில் பிற்படுத்தப்பட்டவர் ஒருவர் மட்டும்தான் 275 துணை மேலாளர்களில் பிற்படுத்தப் பட்டவர்கள் 3 பேர்தான்.

மத்திய அமைச்சகங்களில் 'ஏ' பிரிவு பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 17 சதவீதம். 'பி' பிரிவில் 14 சதவீதம், 'சி' பிரிவில் 11 சதவீதம், 'டி' பிரிவில் 10 சதவீதம்.

24 அமைச்சகங்களின் கீழ் உள்ள அரசுத் துறைகளில் 'ஏ' பிரிவில் பிற்படுத்தப் பட்டோர் 14 சதவீதம், 'பி' பிரிவில் 15 சதவீதம், 'சி' பிரிவில் 17 சதவீதம், 'டி' பிரிவில் 18 சதவீதம்.

அமைச்சரவை செயலகம் என்பது மிகவும் அதிகாரமிக்கது. அதில் உள்ள 64 அதிகாரிகளில் ஒரு பிற்படுத்தப்பட்டவரோ ஒரு பட்டியல் இனத்தவரோ கிடையாது.




தேசிய மய வங்கிகளில் 450 மேலாளர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 5 பேர் மட்டும்தான். அதாவது 1.1%. 1255 துணை மேலாளர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 16 பேர்தான். 1.2%. 27 சதவீத இடஒதுக்கீடு அமுலுக்கு வந்து 28 ஆண்டுகளுக்குப் பிறகும் இதுதான் நிலை.

பார்ப்பன உயர்ஜாதி அதிகாரவர்க்கத்தின் அதிகாரப் பிடி தகர்க்கப்பட்டாலொழிய இந்த உரிமைகள் கிடைக்கப் போவதே இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்.அய்.சி. ஊழியர்கள் தங்களுக்கான வேலை வாய்ப்பு, பதவி உயர்வுப் பிரச்சினைகளாக மட்டும் குறுக்கிப் பார்த்தால் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வே கிடைக்காது. ஒடுக்கப்பட்ட மக்கள், அவர்கள் பிற்படுத்தப்பட்டவராக இருந்தாலும் தாழ்த்தப் பட்டவர்களாக இருந்தாலும் பார்ப்பனர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய சில உயர்ஜாதியினரின் அதிகாரப் பிடியில் தான் கட்டுண்டு கிடக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பெரியாரும் அம்பேத்கரும் இதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயம் தன்னை ஜாதிய அடையாளத்துக்குள் புதைத்துக் கொண்டே இந்த அதிகார மய்யத்தை வீழ்த்த முடியாது. ஜாதியை நாம் ஏற்றுக் கொண்டு அதை நியாயப்படுத்துவதும், தனக்குக் கீழே உள்ள ஜாதியை சமமாக ஏற்க மறுப்பதும் நீடிக்கும் வரை பார்ப்பன அதிகாரம் கொடிகட்டிப் பறந்து கொண்டுதான் இருக்கும். பார்ப்பன அரசியல் அதிகாரத்துக்கு அவர்களை உயர்த்தியதற்கும் அதைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் வாய்ப்புகள் நீடித்ததற்கும் அடிப்படையான காரணம் பார்ப்பனர்கள் சமூக அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பது தான். வழிபாடுகளை சடங்குகளை சாஸ்திரங்களை அவர்கள் தங்கள் பிடியில் வைத்திருக்கிறார்கள். நாமும் அதை அப்படியே சமூகத்தில் ஏற்று வாழப் பழகி விட்டோம். பார்ப்பன கலாச்சாரத்தை உயர்த்திப் பிடிக்கும் சமூக அதிகார மய்யங்களை நாம் புறக்கணிக்கத் தயாராக இல்லை. அது கோயில் - ஜாதிக்குள் திருமணம் - சாஸ்திர சடங்குகளைப் பேணி வாழுதல் - வீட்டு நிகழ்வுகளில் புரோகிதர்களை அழைத்து நடத்துதல் என்று நாம் இப்போதும் கண்மூடித்தனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இடஒதுக்கீட்டின் கீழ் நாம் கல்வி பெற்றால் விழிப்புணர்வு பெறுவோம் என்று பெரியாரும் அம்பேத்கரும் நினைத்தார்கள். நாம் அவர்களைத் தோற்கடித்துக் கொண்டே இருக்கிறோம். எனவே பார்ப்பனரல்லாத மக்கள் நமக்கான உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டம், பார்ப்பனர்களின் சமூக அதிகார மய்யங்களையும் அரசியல் அதிகார மய்யங்களையும் தகர்ப்பதில்தான் அடங்கியிருக்கிறது" என்று விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார்.

# பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் (7)

# வைக்கம் போராட்டம்: பெரியாரே கூறும் வரலாறு


*22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையிலிருந்து.*

வைக்கம் போராட்டத்துக்காக நான் வருகிறேன் என்ற விஷயம் தெரிந்து கொண்டு, போலீஸ் கமிஷனர் பிட், இன்னொரு அய்யர் (அவர் பெயர் இப்போது சரியாய் ஞாபகத்திற்கு வரவில்லை. திவான் பேஷ்தாரர் சுப்பிரமணிய அய்யர் என்று நினைக்கிறேன்), ஒரு தாசில்தார் (விசுவநாத அய்யர்) எல்லோரும் என்னைப் படகிலிருந்து நான் இறங்கும் போதே வரவேற்றார்கள். மகாராஜா அவர்கள், எங்களை அவர்கள் சார்பில் வரவேற்று வேண்டிய எல்லா சவுகரியங்களையும் பண்ணித் தரச் சொன்னார் என்று சொல்லி எங்களை வர வேற்றார்கள். இது எனக்குப் பெரும் ஆச்சரியத்தைத் தந்தது என்றாலும், ஏன் மகாராஜா அப்படிச் செய்தார் என்றால் அதற்கு 3 மாதத்திற்கு முன்பு இருந்த இராஜா டெல்லிக்குப் போகிறதற்கு ஈரோடு வழியாக வந்து, ஒரு நாள் ஈரோட்டிலே தங்கிவிட்டு, அடுத்த நாள் டெல்லிக்கு இரயில் ஏறிப் போவது வழக்கம். அப்படி ஈரோட்டிலே தங்கும்போது, அதற்கு வேண்டிய வசதிகளையும், மகாராஜா எங்கள் பங்களாவிலும் தான் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அப்படி 3 மாதத்திற்கு முன் வந்தபோது அவருடன் இந்த போலீஸ் அதிகாரி, இன்னும் இராஜாவுக்கு உதவிக்குத் தேவையான எல்லா அதிகாரிகளும் வந்து போனதில் இவர்கள் ஈரோட்டில் என்னை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறவர்களாகவும், நானும் அவர்களை எங்கள் வீட்டிற்கு வந்தபோது, சந்தித்துப் பேசியவர்களாகவும் இருந்திருக்கிறோம். இதனால் மகாராஜா சற்று மரியாதை காட்டினார்.

சத்தியாகிரகத்தைத் தொடர்ந்து நடத்த வந்த என்னை மகாராஜா சார்பில் இந்தப் பெரிய அதிகாரிகளே வரவேற்கின்றார்கள் என்று கண்டதும் இப்பக்கத்தில் பாமர மக்களுக்கு ஒரே மகிழ்ச்சியாக ஆகி விட்டது. என்னை விருந்தினராக மகாராஜா கருதினாலும்கூட நான் பல இடங்களில் சென்று பொதுக் கூட்டம் போட்டு சத்தியாக்கிரகத்தைப் பற்றிப் பேசினேன். காரசாரமாகப் பேசினேன், கீழ்ச்சாதி மக்களான நாம் உள்ளே தெருவில் போவதால் தீட்டுப்பட்டுவிடும், செத்துப் போகும் என்று சொல்லும் வைக்கத்தப்பனைப் போட்டு வேட்டி துவைக்கணும் என்றெல்லாம் கடுமையாகப் பேசினேன். சுற்று வட்டார மக்கள் ஆயிரக்கணக்கில் வைக்கம் வந்து கூடி விட்டார்கள். அது இராஜாவுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. 5, 6 நாள் வரை சும்மா தான் இருந்தார். பலரும் போய் அவரிடத்தில் நான் பேசுவது குறித்து முறையிட்டார்கள். பிறகு இராஜாவினால் சும்மா இருக்க முடியவில்லை.

இப்படி சுமார் 10 நாள் ஆனவுடனேயே, ஒரு போலீசு (சூப்பிரண்ட்) அதிகாரி அவர்கள் அய்யங்கார் - அவர் முயற்சியால் பி.சி.26 படி தடையுத்தரவு போட்டார். அந்நாட்டிலே 26 என்பது இப்போது இங்கே 144 தடையுத்தரவு போன்றது. நானும் சட்டம் மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டறிந்தேன். உடனே நான் சட்டத்தை மீறிப் பேசினேன். என்னுடன் (தற்போது காங்கிரசுக்காரராக இருக்கும்) கோவை திரு. அய்யாமுத்து அவர்களும், மற்றும் இருவரும் சட்டம் மீறினோம். எங்களைக் கைது செய்தார்கள். எல்லோருக்கும் ஒரு மாதம் வெறுங்காவல் போட்டார்கள்! என்னை அருவிக்குத்தி என்ற ஊரில் உள்ள ஜெயிலில் (சிறையில்) வைத்தார்கள். அதற்குப் பிறகு என் முதல் மனைவியார் திரு. நாகம்மையாரும் பிறகு நான் வெளியே வந்தவுடன் என் தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாளும் மற்றும் சிலரும் வந்து நாடெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார்கள். நான் விடுதலை ஆகி வந்து அதே மாதிரி மறுபடியும் திட்டம் போட்டேன்.

நான் வெளியே வருவதற்குள் இந்தக் கிளர்ச்சிக்கு ஏராளமான அளவில் ஆதரவு பெருகிவிட்டது. மளமளவென்று ஆட்களும் வந்து சேர ஆரம்பித்தனர். ஏராளமான பேர்கள் பல பகுதிகளிலும் சென்று சுற்றுப் பயணம் செய்து தீவிரப் பிரச்சாரம் செய்தார்கள். எதிரிகளும் அடிதடி, காலித்தனம், கலவரங்கள் முதலியவற்றில் ஈடுபட்டு இதை எப்படியாவது ஒடுக்கிவிட வேண்டுமென்று பலவித முயற்சிகளும் செய்து பார்த்தார்கள்.



**ராணி காந்தியோடு பேசியபோது ராணி தெரிவித்தார், நாங்கள் ரோடுகளைத் திறந்து விட்டுப் போகிறோம். ஆனால், அதை விட்டவுடன் நாயக்கர் கோயிலுக்குள் போக உரிமை வேண்டும் என்று கேட்டு ரகளை செய்தால் என்ன செய்வது? அதுதான் தயங்குகிறோம் என்றார்கள். உடனே காந்தி டி.பி.யில் தங்கியிருந்த என்னிடத்தில் வந்து ராணி சொன்னதைச் சொல்லி என்ன சொல்லுகிறாய்? இதை ஒப்புக் கொண்டு விடுவது நல்லது என்றார்.**

ஆனால், போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு பெருகிக் கொண்டேயிருந்தது. வெளிநாடுகளிலிருந்து மலையாளிகளும் சாதிக் கொடுமை என்பதைக் கண்டு மனம் துடித்து, அதற்குத் தங்கள் எதிர்ப்பையும் சாதிக் கொடுமைகளை எதிர்த்துச் செய்யப்படும் போராட்டத்திற்குத் தங்கள் ஆதரவையும் காட்டும் வண்ணம் தினம் ரூ.50-60-100 என்று மணியார்டர் அனுப்பிக் கொண்டேயிருந்தார்கள்.

பெரிய பந்தல் போட்டு தினசரி போராட்ட வீரர்கள் முகாம் செய்திருந்த வீட்டில் 200-300 பேர் சாப்பிடுவார்கள்! தேங்காயும், மற்ற காய்கறிகளும், மலைமலையாகக் குவிந்து கிடக்கும். பெரிய கலியாண வீடு மாதிரி காரியங்கள் நடைபெறும்.

திரு. இராசகோபாலாச்சாரியார் எனக்குக் கடிதம் எழுதினார். நீ ஏன் நம் நாட்டை விட்டுவிட்டு இன்னொரு நாட்டிலே போய் இரகளை செய்கிறாய்? அது சரியல்ல. அதை விட்டுவிட்டு நீ இங்கு வந்து, நீ விட்டு விட்டுச் சென்ற வேலைகளைக் கவனி என்று. அப்போது இருந்த எஸ். சீனுவாசய்யங்காரும் இப்படித்தான் என்னை வைக்கத்திற்கு வந்தே அழைத்தார்; வரச் சொன்னார். அதே மாதிரி பத்திரிகையிலேயும் எழுதினார்கள். ஆனால், இதற்குள் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் 1000 பேருக்கு மேல் சேர்ந்தார்கள். தினமும் ஊர் முழுவதும் சத்தியாக்கிரக பஜனையும், தொண்டர்கள் ஊர்வலமும் நடந்து உணர்ச்சி வலுத்து விட்டது.

பஞ்சாபில் சுவாமி சிரத்தானந்தா என்பவர் ஒரு அப்பீல் போட்டார். அதன் பிரகாரம் பஞ்சாபிலேயிருந்து சீக்கியர்கள் 20-30 ஆள்களையும், இரண்டாயிரம் ரூபாயையும் கையிலெடுத்துக் கொண்டு நேரே வைக்கத்துக்கு வந்தார்கள். தாங்கள் சாப்பாட்டுச் செலவை ஏற்றுக் கொண்டு ஆதரவு தருவதற்காக. உடனே இங்கிருந்த பார்ப்பனர்கள் எல்லாரும் சீக்கியர்கள் வந்து, இந்துமதத்திற்கு எதிராகப் போர் தொடுக்கிறார்கள் என்றெல்லாம் காந்திக்கு எழுதினார்கள்.

உடனே அதன் பேரில் காந்தியார் துலுக்கன், கிறிஸ்தவன், சீக்கியன் ஆகிய பிற மதக்காரன் எவனும் இதில் கலந்து கொள்ளக் கூடாது என்று எழுதி விட்டார்கள்.

காந்தி எழுதினவுடனே இதில் கலந்திருந்த சீக்கியன், சாயபு, கிறிஸ்தவன் எல்லாரும் போய் விட்டார்கள். அதுபோலவே, தீவிரமாக இதில் ஈடுபட்டு முன்னோடியாக உழைத்த காலஞ்சென்ற ஜோசப் ஜார்ஜீக்கும் இராஜகோபாலாச்சாரியார் கடிதம் எழுதினார். இந்து மதச்சார்புள்ள இந்தக் காரியத்திலே நீ சேர்ந்திருப்பது தப்பு என்றார்.

அதை ஜோசப் ஜார்ஜ் அவர்கள் இலட்சியம் பண்ணாமல் திருப்பி எழுதினார். நான் என் சுயமரியாதையை விட்டுவிட்டு இருக்க மாட்டேன். வேண்டுமானால் என்னை விலக்கி விடுங்கள் என்றார். தற்போதைய நாகர்கோயில் பயோனீர் டிரான்ஸ் போர்ட்டைச் சேர்ந்த சேவு என்பவரும் அண்மையில் காலஞ்சென்ற டாக்டர் எம்.இ. நாயுடு அவர்களும் என்னுடனேயே இருந்து தொடர்ந்து நடத்துவது என்று முடிவு செய்தார்கள். அவர்கள் இதை விட்டுப் போக மாட்டேன் என்று உறுதியாகத் தெரிவித்து விட்டார்கள் என்றாலும், காந்தி சத்தியாக்கிரகத்திற்கு விரோதமாக எழுதிப் பணத்தையும் ஆளையும் தடுத்து விடுவாரோ என்று சிலர் பயப்பட்டார்கள்.

அந்தச் சமயம் சாமி சிரத்தானந்தா அவர்கள் வைக்கம் வந்து தான் பணத்துக்கு வகை செய்வதாகச் சொன்னார். பிறகு காந்தி கட்டளைக்கு விரோதமாவே சத்தியாக்கிரகம் நடந்து வந்தது.

இதற்கிடையில் நடந்த ஒரு நிகழ்ச்சியும் கவனிக்கத்தக்கது. எங்கள் போராட்டத்துக்குப் பெரிய மரியாதையையும், செல்வாக்கையும், தேடிக் கொடுத்துவிட்டது, இந்தக் காந்தி கட்டளை. இந்த சமயத்தில் என்னை மறுபடியும் பிடித்து 6 மாதக் கடினக் காவல் விதித்து ஜெயிலில் போட்டு விட்டார்கள். பிறகு சத்தியாகிரகத்தை நிறுத்துவதற்காகவும், எங்களை அழிப்பதற்காகவும் என்று நான் ஜெயிலில் இருக்கிற சமயத்தில் இந்த நம்பூதிரி பார்ப்பனர்களும், சில வைதீகர்களும் சேர்ந்து கொண்டு சத்துரு சங்கார யாகம் என்னும் ஒன்றை வெகு தடபுடலாக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து நடத்தினார்கள். ஒரு நாள் நடுச்சாமத்தில் தொடர்ந்து வேட்டுச் சத்தம் கேட்டது. நான் ஜெயிலில் விழித்துக் கொண்டிருந்தேன். ரோந்து வந்தவனைப் பார்த்துக் கேட்டேன், என்ன சேதி? இப்படி வெடிச் சத்தம் கேட்கிறது? இந்தப் பக்கம் ஏதாவது பெரிய திருவிழா நடக்கிறதா? என்று கேட்டேன். அதற்கு அவன் சொன்னான், மகாராஜாவுக்கு உடம்பு சவுக்கியமில்லாமல் இருந்தது. மகாராஜா நேற்று இராத்திரி திருநாடு எழுந்துவிட்டார் என்றான்.

அதாவது ராஜா செத்துப் போனார் என்று சொன்னான். அவ்வளவுதான், மகாராஜா செத்தார் என்றவுடன் எங்களுக்கு ஜெயிலுக்குள்ளாகவே ரொம்ப பெருமை வந்துவிட்டது. அவர்கள் பண்ணிய யாகம் அங்கேயே திருப்பி மகாராஜாவைக் கொன்றுவிட்டது என்றும், அந்த யாகம் சத்தியாக்கிரகக்காரர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும், மக்களிடையே இது ஒரு தனி மதிப்பை ஏற்படுத்திவிட்டது. அதன் பிறகு அரசாங்கம் எங்களையெல்லாம் ராஜாவின் கருமாதியை முன்னிட்டு விடுதலை செய்தனர். எதிரிகள் குரலும், கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிவர ஆரம்பித்தது.

ராணியும் கூப்பிட்டு எங்களோடு ராஜி பண்ணி ஒரு உடன்பாட்டுக்கு வர விருப்பம் தெரிவித்தவுடன், அப்போது சமஸ்தானத்தில் திவானாக இருந்த ஒரு பார்ப்பான் என்னிடத்தில் நேரே ராணி பேசக் கூடாது என்று கருதி திரு. இராஜகோபாலாச்சாரிக்குக் கடிதம் எழுதினார். இராகோபாலாச்சாரியும் எங்கே என்னிடத்தில் ராஜி பேசி உடன்பாட்டிற்கு வந்தால் எனக்கு மரியாதையும், புகழும் வந்து விடுமே, அந்த மாதிரி வரக்கூடாது என்று கருதி, இதைக் காந்தியாருக்கே அந்த வாய்ப்பு அளித்து காந்தியின் மூலமே காரியம் நடந்ததாக உலகுக்குக் காட்ட வேண்டுமென்று தந்திரம் செய்து காந்திக்குக் கடிதம் எழுதினார். எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. எப்படியாவது காரியம் வெற்றியானால் போதும்; நமக்கு பேரும் புகழும் வருவது முக்கியமல்ல என்ற கருத்தில் நானும் ஒப்புக் கொண்டேன்.

காந்தியும் புறப்பட்டு வந்தார். ராணியோடு காந்தி பேசினார்.

ராணி காந்தியோடு பேசியபோது ராணி தெரிவித்தார்கள், நாங்கள் ரோடுகளைத் திறந்து விட்டுப் போகிறோம். ஆனால், அதை விட்டவுடன் நாயக்கர் கோயிலுக்குள் போக உரிமை வேண்டும் என்று கேட்டு ரகளை செய்தால் என்ன செய்வது? அதுதான் தயங்குகிறோம் என்றார்கள். உடனே காந்தி டி.பி.யில் தங்கியிருந்த என்னிடத்தில் வந்து ராணி சொன்னதைச் சொல்லி என்ன சொல்லுகிறாய்? இதை ஒப்புக் கொண்டு விடுவது நல்லது என்றார். நான் சொன்னேன் பப்ளிக் ரோடு திறந்து விடுவது சரி! ஆனால் அதை வைத்துக் கொண்டு கோயிலைத் திறந்து விடும்படி கேட்க மாட்டோம் என்று எப்படி நாம் உறுதியளிப்பது? கோயில் பிரவேசம் என்பது காங்கிரசின் இலட்சியமாக இல்லாவிட்டாலும் எனது இலட்சியம் அதுதானே! அதை எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? வேண்டுமானால் ராணிக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள். இப்போதைக்கு அது மாதிரி கிளர்ச்சி எதுவுமிருக்காது. கொஞ்ச நாள் அது பற்றி மக்களுக்கு விளங்கும்படி பிரச்சாரம் செய்து, கலவரத்திற்கு இடமிருக்காது என்று கண்டால்தான் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படலாம் என்று சொல்லுங்கள் என்று சொன்னேன்.

அதைக் காந்தி ராணியிடம் சொன்னவுடன் ராணியார் ரோட்டில் யார் வேண்டுமானாலும் நடந்து செல்லலாம் என்று உத்தரவு போட்டு பொது சாலையாக ஆக்கினார்கள்.

**(தொடரும்)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 ~~LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018~~
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## நேரலையில் வந்த மோடியை திருப்பி அனுப்பிய திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி மாணவர்கள்

இரண்டு நாட்களுக்கு முன்னர் மதுரைக்கு வந்த மோடியை தமிழகமே எதிர்த்து நின்றது. உள்ளுக்குள் பொறுமியவாறு சடங்குத்தனமாக உரையாற்றி விட்டு பறந்தார் மோடி. நேரில் வந்தால் மட்டும் என்றில்லை 'நேரலை'யில் வந்தாலும் அதே சம்பவம்தான் என்பதை செய்து காட்டியிருக்கின்றனர், திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி மாணவர்கள்.

"தேர்வு கால பதற்றத்தை கையாள்வது எப்படி'' என்பது மோடியின் நிகழ்ச்சிகளுள் ஒன்று. இந்தியில் இதற்குப் பெயர் "பரிக்ஷா பே சர்ச்சா 2.0'' பதட்டம் குறையுதோ இல்லையோ நிகழ்ச்சியின் பெயரைக் கேட்டாலே மாணவர்களுக்கு எரிச்சல் வருவது நிச்சயம். இந்த நிகழ்ச்சியை மாணவர்கள் நேரலையில் கண்டு பயன்பெறுவதற்கு ஏற்ப ஏற்பாடுகளை செய்யச் சொல்லி "மேலிட உத்தரவாம்''. கல்லூரியின் பெரியார் கலையரங்கத்தில் 'படம் காட்ட' ஏற்பாடுகளை செய்திருந்தது கல்லூரி நிர்வாகம். இந்நிகழ்வில் பங்கேற்காத மாணவர்களுக்கு வருகைப் பதிவு கிடையாது என மிரட்டி வரவழைத்திருக்கின்றனர். இவற்றையெல்லாம் காணச் சகிக்காத முற்போக்கு மாணவர்கள் சிலர், "கல்லூரி கலையரங்கமா, மோடியின் விளம்பர இடமா'' என்று கேள்வி எழுப்பி அரங்கம் அதிர கலகம் செய்தனர். "எக்ஸாம் ஸ்ட்ரசுக்கா நடத்துறியா? எலெக்சன் ஓட்டுக்கா நடத்துறியா?'' என்ற முழக்கங்களை எழுப்பினர். முற்போக்கு மாணவர்களுக்கு ஆதரவாக, கூடியிருந்த மாணவர்கள் எழுப்பிய கரவொலியும் விசில் சத்தமும் காதை பிளந்தது. மோடியின் நேரலை நிகழ்வும் அதோடு நிறுத்தப்பட்டது. மாணவர்கள் உற்சாகத்தோடு கலைந்து சென்றனர்.

## சங்கராபுரம் ஆணவப் படுகொலை கண்டனக் கூட்டத்தில் ஜாதி மறுப்புத் திருமணம்




பெரியார் அம்பேத்கர் நினைவு நாட்களை முன்னிட்டு "தமிழக அரசே ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தனிச் சட்டம் இயற்று'' என்கிற தலைப்பில் விழுப்புரம் மாவட்டம் பாக்கம் (சங்கராபுரம்) கிராமத்தில் 19.12.2018 (தி.பி.2049 புதன்) அன்று மாலை 5 மணி அளவில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

"அன்னை மணியம்மை'' இசைக் குழுவினரின் பறை இசை மற்றும் பகுத்தறிவு சாதி ஒழிப்பு பாடல்களுடன் கூட்டம் தொடங்கப்பட்டன. விழுப்புரம் மாவட்ட துணைச் செயலாளர் நாகராசன், மாவட்ட அமைப்பாளர் சாமிதுரை பகுத்தறிவுப் பாடல்களை பாடினர்.

கூட்டத்திற்கு இரா.துளசிராசா தலைமை வகித்தார். பெரியார் பிரபு வரவேற்புரை ஆற்றினார். தனிமொழி, சோபனா, முத்துலட்சுமி, செந்தாமரை, சத்யா மற்றும் இராமச்சந்திரன், நீதிபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இரத்தினசாமி, துரைசாமி, அய்யனார், இராமர்,பெரியார் பாரதிதாசன் ஆகியோர் ஆணவக் கொலைகளின் பாதிப்புகள் குறித்து உரையாற்றினார்கள்.

கூட்டத்தில் சாதி மறுப்பு திருமணமும் நடைபெற்றது. பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சரண்ராஜ் நூரோலையைச் சேர்ந்த ரஷ்யா ஆகிய இணையர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சுயமரியாதை திருமணத்தை நடத்தி வைத்தார். இணையர்கள் "புரட்சி பெரியார் முழக்கம்'' வார ஏட்டின் வளர்ச்சி நிதியாக ரூ. 2000 வழங்கினர். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். இராசீவ்காந்தி நன்றியுரையாற்றினார்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனர் வேணுகோபால் தூத்துடன் தொடர்பிருப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவர்கள் மீது வழக்கும் பதிவானது.

பொதுவாக வங்கியின் உயர் பொறுப்பில் இருப்பவர்களின் உறவினர்களுக்கு கடன் வழங்கும்போது அதற்கு ஒப்புதல் அளிக்கும் குழுவில் சம்பந்தப்பட்டவர் இடம்பெறக் கூடாது என்பது வங்கி விதி. ஆனால் வீடியோகான் நிறுவனத்துக்கு கடன் வழங்கியபோது சந்தா கோச்சாரும் இருந்துள்ளார். கணவருக்கு மறைமுகமாக பல ஆயிரம் கோடி கைமாற உதவியுள்ளார்.

மேலும், 2012ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன், 5 ஆண்டுகளுக்குப் பிறகு வாராக்கடனாக தள்ளுபடி செய்யப்படுகிறது. இதனால் வங்கிக்கு அவர் ஏற்படுத்திய இழப்பு ரூ.1730 கோடி. ஆனால், இதற்கு பொறுப்பேற்க வேண்டியவருக்கு போனஸ் பங்குகள் வழங்கப்படுகின்றன. குற்றச்சாட்டு எழுந்த நிலையிலும் அவரைப் பாதுகாக்கவே வங்கி நிர்வாகம் முயற்சித்தது. இதுதான் பார்ப்பன அதிகார வர்க்கத்தின் நிர்வாக 'நேர்மை'.

ஆனால், இப்போது குற்றச்சாட்டு உறுதி யானதும், அவருக்கு வழங்கப்பட்ட போனஸ் பங்குகளை திரும்பப் பெறப் போவதாகவும், அவரது ராஜினாமாவை பதவி நீக்கமாகவும் அறிவித்துள்ள சந்தர்ப்பவாத நிகழ்வாகவே தெரிகிறது. பிரச்சினை கவனத்துக்கு வந்தபோதே, விசாரணைக் கமிஷனை நியமித்திருக்கலாம். அவ்விதம் நியமித்திருந்தால் வங்கிப் பங்குகளை சரிவிலிருந்து தடுத்திருக்கலாம்.

முன்கூட்டியே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமல், சூழ்நிலைக்கு ஏற்ப இந்த விஷயத்தில் விளக்கமளிக்க வேண்டிய பொறுப்பு அய்.சி.அய்.சி.அய். வங்கி நிர்வாகத்துக்கு உள்ளது. கறை படிந்தவர்களை காக்க நினைப்பதும் வங்கிக்குத்தான் களங்கத்தை ஏற்படுத்தும்.

மேலும், பிரச்சினை வெளியான சமயத்திலிருந்து இதுவரை வாயே திறக்காத சந்தா கோச்சார், பங்குகளை திரும்பப் பெறப் போவதாக அறிவித்தவுடன் வங்கியின் முடிவு ஏமாற்றமளிக்கிறது, அதிர்ச்சியாக உள்ளது என்று குமுறுகிறார்.

## மதுரை பெரியார் பேருந்து நிலையத்தை மத அடையாளமாக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு

மதுரையில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் படி மதுரை பெரியார் பேருந்து நிலையத்தின் முகப்பை ஒரு குறிப்பிட்ட மத அடையாளமான கோபுர வடிவில் அமைப்பது இந்திய அரசியல் சட்டம் வலியுறுத்தும் மதசார்பற்ற தன்மைக்கு எதிரானது என்பதால் அந்த வடிவமைப்பை கைவிட வேண்டும் என்றும் மேம்படுத்தப்படும் பேருந்து நிலையத்தில் தந்தை பெரியாரின் முழு உருவச்சிலை அமைக்கப்பட வேண்டும் என்றும் மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்துத்துவ அமைப்புகள் சார்பில் பெரியார் பேருந்து நிலையத்தின் பெயரை மீனாட்சியம்மன் பேருந்து நிலையம் என மாற்றவேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பேட்டியளித்த திராவிடர் விடுதலைக் கழத்தின் மதுரை மாவட்ட செயலாளர் மா.பா.மணியமுதன் பெரியார் பேருந்து நிலையத்தின் பெயரை மாற்றினாலோ, மத அடையாள வடிவமைப்பை வைத்தாலோ தோழமை அமைப்புகளுடன் இணைந்து போராட்டம் அறிவிக்கப்படும் என அறிவித்தார்.

தற்போது "தந்தை பெரியார் பேருந்து நிலையம் எனும் பெயர் மாற்றப்படாது" என மதுரை மாநகராட்சி ஆணையர் பேட்டி அளித்துள்ளார்.

## பொருளாதார இடஒதுக்கீட்டை எதிர்த்து சங்கராபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்




மத்திய அரசின் உயர்சாதியினருக்கான 10% இடஒதுக்கீடு திட்டத்தை கண்டித்துக் கல்லக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மொழிப் போர் தியாகிகளின் தினமான 25-01-2019 (வெள்ளி) அன்று அவர்களின் நினைவாக ஒரு நிமிடம் மவுன அஞ்சலியோடு ஆர்பாட்டம் தொடங்கியது. மாவட்ட துணைச் செயலாளர். மு.நாகராசு தலைமை வகித்தார். மாவட்ட பொறுப்பாளர்கள் செ.வே.இராசேசு, க.மதியழகன், க.இராமர்,பூ.ஆ.இளையரசன் ஆகியோர் இட ஒதுக்கீடு வரலாறு குறித்தும் உயர்சாதியினருக்கான 10% இட ஒதுக்கீட்டின் பாதிப்புகள் குறித்தும் உரையாற்றினார்கள்.தலைமை செயற்குழு உறுப்பினர் ந. அய்யனார் பல்வேறு கருத்துகளை தொகுத்து இறுதி உரையாற்றினார்.செ.க.வேலாயுதம் நன்றி உரையாற்றினார்.

## திருப்பூர் புத்தகத் திருவிழாவில் 'நிமிர்வோம்' அரங்கு

கழகத்தின் "நிமிர்வோம்'' இதழ் அரங்கு கடந்த ஆண்டைப் போலவே திருப்பூர் புத்தகக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது. திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக அரங்கு (எண்.35) தனியே எடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 31 முதல் பிப்ரவரி 10 வரை கண்காட்சி நடைபெறுகிறது.

அரங்கில் கழக வெளியீடுகள், பெரியாரிய, அம்பேத்கரிய மார்க்சிய நூல்களும் கிடைக்கும்.

தொடர்புக்கு :

முகில் ராசு 9842248174, விஜய்குமார் 9841653200, கவிஞர் தம்பி 9789381010

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 8th Feburary 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN